பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 03 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

ஆகாஷவாணி

**(Tune)**

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மேற்குவங்க மாநிலத்தின் வளர்ச்சியில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

**3.** நாட்டில் கடந்த **12** ஆண்டுகளில் மருத்துவக் கட்டமைப்புகள் பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

**4.** உயிரி தொழில்நுட்பத் துறையில் இந்தியா உலக அளவில் முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

**5.** உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் ஹரிகா வெண்கலப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தின் வளர்ச்சியில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக பிரதமரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற பிஜேபி பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தை ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு வளர்ச்சியில் அக்கறை இல்லை என்று குற்றம் சாட்டினார்.

தேர்தல் ஆணையம் போன்ற அரசியல் சாசன அமைப்புகளை திரிணாமுல் காங்கிரஸ் குறை கூறி வருவதாகவும், இது மோசமான நடவடிக்கை என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் வாக்களார் பட்டியல் தீவிர திருத்தத்தின் மூலம் 63 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஊடுருவல்காரர்கள் மற்றும் போலி வாக்காளர்களே திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் வாக்கு வங்கி என்றும், இதனால் அக்கட்சி வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் மேற்குவங்கத்தின் பாதுகாப்பில் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் மட்டுமல்ல என்றும், இது மேற்குவங்கத்தை காப்பதற்கான தேர்தல் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

நிலக்கரி உற்பத்தி, தொடர்ந்து அதிகரித்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் நிலக்கரியை வாயுவாக்கும் இரண்டு திட்டங்களுக்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட எரிசக்தி சுயசார்பு முக்கியமானது என்றார்.

இதை அடைய நிலக்கரித் துறையின் பங்களிப்பு அவசியம் என்றும் அவர் கூறினார்.

நிலக்கரியை வாயுவாக்கும் நடவடிக்கை இறக்குமதியை குறைக்க வழிவகுக்கும் என்றும், இதனால் அந்நியச் செலாவணி சேமிக்கப்படும் என்றும் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் மருத்துவக் கட்டமைப்புகள் பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

மொராதாபாதில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், 2014ஆம் ஆண்டில் 6 எய்ம்ஸ் மருத்துவமனைகள் இருந்தன என்றும், தற்போது 23ஆக அதிகரித்துள்ளது என்று கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் உள்ளிட்ட அரசின் திட்டங்களின் மூலம் 71 கோடி பேர் பயனடைவதாக அவர் தெரிவித்தார்.

காப்பீட்டுத் திட்டங்கள் மூலம் மருத்துவச் செலவுகளை அரசு ஏற்பதால், மக்களின் மருத்துவச் செலவு பெருமளவு குறைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

சாதாரண மக்களுக்கும் உயர்தர மருத்துவ வசதிகள் கிடைக்கும் நோக்கில் மத்திய அரசு தொடர்ந்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

<<<<>>>>

உயிரி தொழில்நுட்பத் துறையில் இந்தியா உலக அளவில் முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக மத்திய அறிவியல் மற்றும்

தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீரின் கத்துவா-வில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்தின்கீழ் 600 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் மருந்து நிறுவனத்திற்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

இந்தியா உயிரி தொழில்நுட்பம் சார்ந்த மருந்து உற்பத்தி துறையில் வளர்ச்சியடைந்து வருவதாகத் தெரிவித்தார்.

இதனை ஊக்குவிக்கும் வகையில் பட்ஜெட்டில் பயோஃபார்மா சக்தி என்ற திட்டத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உயிரி தொழில்நுட்பம் சார்ந்த மருந்து உற்பத்தி துறையில் இந்தியா 3வது இடத்தில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் நடவடிக்கைகள் காரணமாக ஜம்மு-கஷ்மீர் வளர்ச்சியடைந்து வருவதாகவும், இப்பகுதி வருங்காலத்தில் மருந்து உற்பத்தி துறையில் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

உலகளாவிய நெருக்கடிக்கு இடையிலும் நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடுத்த ஆண்டு 7 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

போர் உள்ளிட்ட உலகளாவிய நெருக்கடிகளை இந்தியா வாய்ப்புகளாக மாற்றி வருகிறது என்றும், சுயசார்பை நோக்கிய முயற்சிகளை நாடு அதிகரித்து வருவதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பூங்கா அமைக்கப்படும் என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

ஸ்ரீநகரில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் இப்பகுதியில் மீன் உற்பத்தி அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இத்துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களும் அதிக அளவில் உருவாகும் என்று திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அசாமில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

குவஹாத்தியில் பல்வேறு திட்டங்களை இன்று அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து இளையோர் விழாவிலும் அவர் உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

அசாமில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இரண்டாவது கட்ட வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட இரண்டாவது வேட்பாளர் பட்டியலில் **23** வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**126** பேர் கொண்ட அசாம் சட்டப்பேரவைக்கு காங்கிரஸ் கட்சி இதுவரை **65** வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

<<<<>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் மூலம் தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில் **2** லட்சத்து **18** ஆயிரம் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டம் தங்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக இதில் பயன்பெற்ற விவசாயிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

**(Voice Byte - Farmers - 39 Sec)**

<<<<>>>>

நேபாளத்தில் காட்மண்டு அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் இந்திய யாத்ரீகர்கள் **7** பேர் உயிரிழந்தனர்.

காந்தர் பகுதியில் உள்ள பள்ளத்தாக்கில் பேருந்து ஒன்று கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக காவல்துறையினர் கூறியுள்ளனர்.

<<<<>>>>

சண்டிகர், ஹரியானா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட் உள்ளிட்ட பகுதிகளின் சில இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், ஒடிசா, தெலங்கானா, மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

தலைநகர் தில்லியின் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளின் சில இடங்களில் இன்று லேசான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பிற பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் ஹரிகா வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் அவர் **5** புள்ளி **5** புள்ளிகளைப் பெற்றார்.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கேரள அணி - ஈஸ்ட் பெங்கால் இடையிலான ஆட்டம் டிராவில் முடிந்தது.

பெங்களூருவில் நடைபெற்ற மோகன் பஹான் - பெங்களூரு அணிகளுக்கு இடையேயான மற்றொரு ஆட்டமும் டிராவில் நிறைவடைந்தது.

குவஹாத்தியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் வடகிழக்கு அணி - ஜம்ஷெட்பூர் அணியையும், லக்னோவில் நடைபெறும் ஆட்டத்தில் காசி அணி - மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

-------------

இந்தியா - மியான்மர் இடையே நடைபெற்ற **17** வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

**Yangon**-ல் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா **3-2** என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

-------------

மங்கோலியாவில் வரும் 28ஆம் தேதி தொடங்க உள்ள ஆசிய குத்துச்சணடை சாம்பியன் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி நேற்று உலன்பட்டார் சென்றடைந்தது.

------------

பஹ்ரைன் மற்றும் சவுதி அரேபியாவில் ஏப்ரல் மாதம் நடைபெறுவதாக இருந்த ஃபார்முலா-1 கார்பந்தயம் ரத்து செய்யப்படுவதாக சர்வதேச மோட்டார் வாகன போட்டிகள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

மேற்காசியில் நடைபெற்று வரும் போர் காரணமாக பாதுகாப்பு கருதி இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

**<<<<The End>>>>**